**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். *279*** **நாள் : *20.09.2022***

**பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகள் அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையினைப் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என சென்னைப் பள்ளிகளுக்கான இலச்சினையை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சியில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே. என். நேரு அவர்கள் தகவல்.**

பெருநகர சென்னை மாநகராட்சியின் சென்னைப் பள்ளிகளை தனித்துவத்துடன் அடையாளப்படுத்தும் வகையில் சென்னைப் பள்ளிக்கான இலச்சினையினை *(Logo)* மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே. என். நேரு அவர்கள், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் மற்றும் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி. கே. சேகர்பாபு ஆகியோர் இன்று *(20.09.2022)* ரிப்பன் கட்டட வளாகத்தில் அறிமுகப்படுத்தினார்கள்.

தொடர்ந்து, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் சென்னைப் பள்ளிகளின் கற்றல், கற்பித்தல் முறைகள், கட்டமைப்பு வசதிகள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள குறும்படத்தினை வெளியிட்டனர்.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கல்வி மற்றும் கல்விச் சாரா திறன்களை போட்டிகள் மூலம் கண்டறிய ஏதுவாக அவர்களை குழுக்களாக பிரித்து அடையாளம் காணும் பொருட்டு, தமிழர்களின் நிலப் பாகுபாட்டை குறிக்கும் வகையிலான குறிஞ்சி, முல்லை, மருதம் மற்றும் நெய்தல் குழுக்கள் உருவாக்கப்பட்டு அதற்கான அடையாளங்களாக தனித்தனி பேட்ஜ்களும் மாணவர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் இன்று வழங்கினார்கள்.

இந்தக் குழுக்களில் மாணவர்களுக்கு பலத்தையும், தைரியத்தையும் உருவாக்கிடும் வகையில், மலையும் மலை சார்ந்த குறிஞ்சி நிலத்தைக் குறிக்கும் சிவப்பு நிற பேட்ஜ்கள், மாணவர்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் காடும், காடு சார்ந்த முல்லை நிலத்தை குறிக்கும் பச்சை நிற பேட்ஜ்கள், மாணவர்களின் வாழ்வில் மகிழ்ச்சியையும், செழிப்பையும் அளிக்கும் வகையில் வயலும் வயல் சார்ந்த மருத நிலத்தினை குறிக்கும் வகையில் மஞ்சள் நிற பேட்ஜ்கள், மாணவர்களுக்கு ஞானத்தை உருவாக்கிடும் வகையில், கடலும் கடல் சார்ந்த நெய்தல்

நிலத்தினை குறிக்கும் வகையில் நீல நிற பேட்ஜ்கள், மாணவர்களின் தலைமைப் பண்பையும், ஒருங்கிணைந்த குழு ஆற்றலையும் வளர்க்கும் வகையில் பள்ளி மாணவர்களின் தலைவர்/தலைவி, பள்ளி மாணவர்களின் துணைத் தலைவர்/தலைவி, விளையாட்டுத் துறை மாணவர்களின் தலைவர், வகுப்பு மாணவர்களின் தலைவருக்கான பேட்ஜ்கள் இன்று மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்பட்டது.

தொடர்ந்து, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் *2022-23*ம் கல்வியாண்டில் ஆசிரியர் தினத்தையொட்டி நடைபெற்ற பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, பாட்டுப் போட்டி, இசைப் போட்டி, விளையாட்டுப் போட்டி போன்ற பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற *395* ஆசிரியர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் கேடயங்களை வழங்கினார்கள்.

**இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது :**

பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளின் கல்வித்தரத்தை உயர்த்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறுவிதமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். இந்தப் பள்ளிகளின் வளர்ச்சிக்காக மட்டுமல்லாமல் மாநகரில் மேற்கொள்ள வேண்டிய பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்காக மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும், மாநகராட்சிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மேயர் உட்பட அனைத்து உள்ளாட்சிப் பிரதிநிதிகளும் தங்கள் பகுதிகளில் திட்டங்களைப் பெறுவதற்காக சிறப்பாக பணியாற்றி வருகிறார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை மாநகரில் அனைத்து விதமான வளர்ச்சிகளையும் ஏற்படுத்த சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். போக்குவரத்துத் துறையின் சார்பில் பணியாளர்களின் வாரிசுகள் பயன்பெறும் வகையில் மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகள் அமைக்கப்பட்டு *32%* இட ஒதுக்கீடும் வழங்கப்பட்டு வருகிறது. இதனால் போக்குவரத்து தொழிலாளர்களின் வாரிசுகளுக்கு உயர்கல்வி பெறுவதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**இதேபோன்று, சென்னை மாநகராட்சியின் சார்பில் மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகள் அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையினைப் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.** இந்த நடவடிக்கைக்கு மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக் கொள்வதாக தெரிவித்தார்.

தொடர்ந்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாநகராட்சி பள்ளிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள கற்றல் முறைகள், கட்டமைப்புகள் பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் குறும்படம் வெளியிட்டமைக்காகவும், மாணவர்களின் பல்திறன்களை வெளிக்கொண்டு வரும் வகையில் குறிஞ்சி, முல்லை, மருதம் மற்றும் நெய்தல் என குழுக்களாக அடையாளப்படுத்துதல் போன்ற முன்னெடுப்புகளை எடுத்தமைக்காகவும் மாநகராட்சிக்கு பாராட்டுகளை தெரிவித்தார்.

மேலும், ஆசிரியர் தினத்தையொட்டி நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற ஆசிரியர்களுக்கு பாராட்டுகளை தெரிவித்து, ஆசிரியப் பெருமக்கள் ஊக்கப்படுத்தும் வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில் இதுபோன்ற பல்வேறு விதமான நடவடிக்கைகள் செயல்படுத்தப்படும் என மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே. என். நேரு அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள், முதன்மைச் செயலாளர்/ஆணையாளர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., அவர்கள், மதிப்பிற்குரிய துணை மேயர் திரு. மு. மகேஷ் குமார் அவர்கள், ஆளுங்கட்சித் தலைவர் திரு. ந. இராமலிங்கம் அவர்கள், நிலைக்குழுத் தலைவர்கள் திரு.க.தனசேகரன் (கணக்கு) அவர்கள், திரு. த. விசுவநாதன் (கல்வி) அவர்கள், திரு. த. இளைய அருணா (நகரமைப்பு) அவர்கள், திருமதி சர்பஜெயாதாஸ் நரேந்திரன் (வரிவிதிப்பு மற்றும் நிதி) அவர்கள், டாக்டர் கோ.சாந்தகுமாரி (பொதுசுகாதாரம்) அவர்கள், நியமனக் குழு உறுப்பினர் திரு. சொ. வேலு அவர்கள், துணை ஆணையாளர்கள் திரு.எம்.எஸ்.பிரசாந்த், இ.ஆ.ப., (பணிகள்) அவர்கள், திரு.விஷு மஹாஜன், இ.ஆ.ப., (வருவாய் (ம) நிதி) அவர்கள், திருமதி டி.சினேகா, இ.ஆ.ப., (கல்வி) அவர்கள், திரு.எம்.சிவகுரு பிரபாகரன், இ.ஆ.ப., (வடக்கு வட்டாரம்) அவர்கள், திரு.எஸ்.ஷேக் அப்துல் ரஹ்மான், இ.ஆ.ப., (மத்திய வட்டாரம்) அவர்கள், மண்டலக்குழுத் தலைவர்கள் திரு.ஏ.வி. ஆறுமுகம், திரு.எஸ்.நந்தகோபால், திரு.நேதாஜி யு.கணேசன், திரு.ஸ்ரீராமுலு, திருமதி சரிதா மகேஷ்குமார், திரு.பி.கே.மூர்த்தி, திரு.கூ.பி.ஜெயின், திரு.எம்.கிருஷ்ணமூர்த்தி, திரு.வே.ராஜன், திரு.என்.சந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**